C.P.No.92/2018
Date.24-11-2020
Witness: MW 1 Thiru.K.Rajagopalan

சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியிடம் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-

பெரிய அல்லது சிறிய நிறுவனங்கள் பொருட்களை ஏற்றுமதி , இறக்குமதி செய்யும்போது அதற்கு உதவி செய்வது எங்கள் நிறுவனத்தின் பணி என்றால் சரிதான். அவ்வாறு உதவி செய்வதற்கு அந்த நிறுவனங்கள் எங்கள் நிறுவனத்திற்கு சேவை கட்டணம் வழங்கும் என்றால் ஆமாம். கோவை அலுவலகத்தில் மனுதாரர் தவிர வேறு பணியாளர்களும் பணி செய்தார்களா என்றால் மனுதாரரும் , மற்றும் ஒருவரும் பணி செய்தார்கள். மற்ற நிறுவனங்களுக்கு சென்று ஆர்டர் பெற்றுவருவதும் ஏற்றுமதி இறக்குமதிக்கு உதவி செய்வதும், மற்றும் Payment Collection சென்று வருவதும் மனுதாரரின் பணி என்றால் ஆமாம். ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான Ware house துடியலூர், சிங்கநல்லுர், இருகூர் ஆகிய பகுதிகளில் உள்ளது என்றால் சிங்காநல்லூரில் முதலில் இருந்தது, தற்போது Close ஆகிவிட்டது, மற்ற இரண்டு ஊர்களிலும் உள்ளது. மேற்படி பகுதிகளுக்கு சென்றுவரும் வேலை மனுதாரருக்கு உள்ளதால் அவர் அலுவலகத்தில் முழு நேரமும் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல, Ware house ல் மாதத்திற்கு ஒரு நாள் அல்லது இரண்டு நாள் மட்டும்தான் வேலை இருக்கும். மனுதாரருக்கு ஆர்டர் பெற்றுவருவதும், Payment Collection செய்வதும் முக்கியமான வேலை என்பதால் அவர் அதற்கான அதிக நேரம் வெளியில் செலவிடவேண்டியிருந்தது என்றும் அலுவலகத்தில் அதிக நேரம் இருக்க முடியவில்லை என்றும் சொன்னால் சரிதான். EMN Shipping, STV Shipping ஆகிய நிறுவனங்களை மனுதாரர் ஆரம்பித்துள்ளார் என்று எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் EMN Shipping ஆரம்பித்தது 20.09.2018 அன்று தெரியவந்தது, அதன்பிறகு சுமார் 10 அல்லது 15 நாட்கள் கழித்து அவர் STV

Shipping ஆரம்பித்துள்ளதும் எனக்கு தெரியவந்தது. இந்த இரண்டு நிறுவனங்களும் எனது அறிவுறுத்தலின் பேரில்தான் 2010ம் வருடமே ஆரம்பிக்கப்பட்டது என்று மனுதாரர் கூறுகிறார் என்றால் அது சரியல்ல. PEARL PACKAGING நிறுவனத்தின் உரிமையாளர்களில் திரு. ராஜிவ் என்பவரும் ஒருவர் என்றால் சரிதான். மேற்படி ராஜிவ் என்பவருக்கும் அந்த நிறுவனத்தின் மற்ற உரிமையாளர்களுக்கும் இடையில் பிரச்சணை ஏற்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. நிறுவனங்களில் ஆர்டர் பெறும் போது அந்த நிறுவனங்களுக்கு கமிசன் கொடுப்பது வழக்கம் என்றால் எல்லா நிறுவனங்களுக்கும் கொடுக்க மாட்டோம், ஒரு சில நிறுவனங்களுக்கு மட்டும் கமிசன் கொடுப்போம். PEARL PACKAGING நிறுவனத்திற்கு கமிசன் கொடுப்பது எங்கள் வழக்கம் என்றால் இல்லை. PEARL PACKAGING நிறுவனத்தின் ராஜிவ் அவர்களுக்கு கமிசன் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் EMN Shipping, STV Shipping ஆகிய நிறுவனங்களை ஆரம்பித்தோம் என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனம் சேவை செய்யும் நிறுவனங்களைப்பற்றி எனக்கு தெரியும் என்றால் தெரியும், ஆனால் அந்த நிறுவனங்களுடன் எனக்கு நெருக்கமான தொடர்பு இல்லை. PEARL PACKAGING , VENAD FOOD, Bright Engineering, ஆகிய நிறுவனங்களுக்கு EMN Shipping, STV Shipping நிறுவனங்களில் இருந்து Invoice வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி மூன்று நிறுவனங்களுக்கும் சேவை செய்ததற்காகத்தான் EMN Shipping, STV Shipping நிறுவனங்களின் Invoice வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, Sharan Shipping சேவை செய்ததற்கு கொடுக்க வேண்டிய Invoice க்கு பதிலாக EMN Shipping, STV Shipping நிறுவனங்கள் Invoice மனுதாரர் வழங்கியுள்ளார். Sharan Shipping ல் வேலை செய்யும் மனுதாரர் EMN Shipping, STV Shipping Invoice களை கொடுக்கிறார் என்று மற்ற நிறுவனங்கள் ஏதாவது என்னிடம் புகார் தெரிவித்ததா என்றால் இல்லை, காரணம் மனுதாரர் Sharan Shipping Invoice மூலம் பகுதி தொகையும்,

அவருடைய EMN Shipping, STV Shipping Invoice கள் மூலம் பகுதி தொகையும் கொடுப்பதை வழக்கமாக கொண்டிருந்தார், மேலும் சில சமயங்களில் ரொக்கமாகவும் தொகை வாங்கிவருவார், அதனால் புகார் எதுவும் எனக்கு வரவில்லை. மனுதாரர் EMN Shipping, STV Shipping Invoice களை நாங்கள் சேவை செய்யும் நிறுவனங்களுக்கு கொடுத்து வந்தது 2010 ம் வருடமே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, 20.09.2018 தேதிக்கு பிறகுதான் எனக்கு தெரியவந்தது. STV Shipping Invoice ல் எதிர்மனுதாரர் நிறுவனமான Sharan Shipping ன் Service Tax Number தான் குறிப்பிடப்பட்டுள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியும், 20.09.2018 தேதிக்கு பிறகுதான் எனக்கு தெரியும். எங்கள் சேவை பெறும் நிறுவனங்கள் இந்த Service Tax Number ஐ பார்த்து விட்டு இரண்டு நிறுவனங்களுக்கும் ஒரே Service Tax Number குறிப்பிடப்பட்டுள்ளது என்று என்னிடம் ஏதாவது புகார் தெரிவித்தார்களா என்றால் இல்லை, Sharan Shipping ன் வியாபார நடவடிக்கைகள் மற்றொரு பங்குதாரரான என் மனைவிக்கும் தெரியுமா என்றால் தெரியும். எனது அறிவுறுத்தலின் பேரில் தான் EMN Shipping, STV Shipping நிறுவனங்கள் மனுதாரரால் ஆரம்பிக்கப்பட்டது என்பது என் மனைவிக்கு தெரியுமா என்றால் அவருக்கு தெரியாது. என் மனைவியை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்போகிறேனா என்றால் தேவையில்லை. எனது நிறுவனத்தில் பணி செய்யும் ஒரு பணியாளர் எனது நிறுவனத்தின் பெயரையும் Service Tax Number யும் தவறாக பயன்படுத்தி வேறு இரண்டு நிறுவனங்களின் பெயரில் எனது வாடிக்கையாளர்களிடம் 10 ஆண்டுகளுக்கும் மேலாக வரவு செலவு வைத்துக்கொண்டிருந்தார் என்பது எனக்கு தெரியாது என்று நான் கூறுவது பொய்யானது என்றால் சரியல்ல. ஆரம்பத்தில் நானும், மனுதாரரும் நெருக்கமான நண்பர்களாக இருந்தோம் என்றால் இல்லை. நான் வேறு ஜாதி பெண்ணை திருமணம் செய்ததற்கு மனுதாரர் மிகவும் உறுதுணையாக இருந்தார் என்றால் சரிதான். அதனால் எனக்கு அவர்மீது மிகுந்த நம்பிக்கை ஏற்பட்டு அதன் அடிப்படையில்தான்

அவர் மேற்சொன்ன இரண்டு நிறுவனங்களையும் ஆரம்பிப்பதற்கு நான் உறுதுணையாக இருந்தேன் என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு நிறுவனங்களின் பெயர்களிலும் பெறப்பட்ட தொகைகளை மனுதாரர் அப்படியே கொண்டுவந்து என்னிடம் பணமாகவும், சில சமயங்களில் வங்கிக் கணக்கிலும் செலுத்தி வந்தார் என்றால் இல்லை. 2018 ம் ஆண்டு மனுதாரர் Increment கேட்டு பிரச்சணை ஏற்பட்டதால்தான் நான் மனுதாரர் போலியாக நிறுவனங்கள் ஆரம்பித்து போலியாக கணக்கு தயாரித்ததாக புகார் கொடுத்தேன் என்றால் இல்லை. போலி Invoice களை பயன்படுத்தி எனது வாடிக்கையாளர் நிறுவனங்களிடம் மனுதாரர் தொகை வசூலித்ததோடு எங்களுக்கு வரவேண்டிய தொகைகளின் தோராய மதிப்பு ரூ.28,00,000/- வரை ஏமாற்றியுள்ளார் என்று நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி தொகைக்கான கணக்கு விபரம் ( ஒவ்வொரு நிறுவனத்திடம் இருந்து வரவேண்டிய தொகை விபரம்) நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுதாரருக்கு P.F கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை, காரணம் 7 பணியாளர்களுக்கு மேல் பணிபுரிந்தால்தான் P.F. கொடுக்க வேண்டும். எனது திருப்பூர், தூத்துக்குடி மற்றும் கோவை நிறுவனத்தில் மொத்தம் எத்தனைபேர் பணிபுரிகிறார்கள் என்றால் 6 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். எனது மூன்று நிறுவனங்களிலும் பணிபுரியும் மொத்த தொழிலாளர்கள் 12 பேர் என்றால் சரியல்ல. எனது நிறுவனத்தில் 5 வருடங்களுக்கு மேல் பணிபுரிந்தவர்கள் யாராவது வெளியில் போயிருக்கிறார்களா என்றால் போயிருக்கிறார்கள். அவ்வாறு சென்றவர்களுக்கு Gratuity தொகை கொடுத்தேனா என்றால் இல்லை. ஆனால் என் விருப்பத்திற்கேற்ப ஒரு தொகை கொடுப்பேன். நான் தொழிலாளர் சட்டங்களை மதித்து எவ்வித ஏற்பாடும் தொழிலாளர்களுக்கு செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் தனக்கு வரவேண்டிய Increment தொகையை கேட்டார் என்ற காரணத்திற்காக அவர்மீது பொய்யான புகாரை காவல் நிலையத்தில் கொடுத்துள்ளேன் என்றால்

சரியல்ல. மனுதாரருக்கு சேரவேண்டிய Gratuity தொகை அவருக்கு கிடைக்கக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில்தான் பொய் புகார் கொடுத்து இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது புகாரும், 28 லட்சம் ஏமாற்றியதாக மனுதாரர் மீது கூறும் குற்றச்சாட்டும் பொய்யானது என்பதால்தான் என்னால் அதுபற்றிய விபரங்களைக்கூட கூற முடியவில்லை என்றால் சரியல்ல. மனுவில் கோரியுள்ள தொகைகள் மனுதாரருக்கு சட்டப்படி கிடைக்கத்தக்கவை என்றும் அவற்றை கொடுக்க நான் சட்டப்படி கடமைப்பட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.